# கேரி தமிழ்ப்பள்ளி

கேரி, வடகேரொலைனா, அமெரிக்கா

https://www.carytamilschool.org

# செய்தியிதழ்

மார்கழி 2016

மலர் 2 இதழ் 1




## முதல்வரின் மனதிலிருந்து...

***திரு. செல்வன் பச்சமுத்து***

நீங்கள் கேரி தமிழ்ப் பள்ளிக் குடும்பத்திற்கு புதிதாக வந்திருந்தால், நீங்கள் ஒரு சிறந்த பள்ளிக்கூடத்திற்கு வந்துள்ளீர்கள் என்று நினைவில் கொள்ளுங்கள். கேரி தமிழ்ப் பள்ளியானது தமிழ் மொழி, கலை, பண்பாடு ஆகியவற்றை பாதுகாப்பான மற்றும் நட்பான சூழலில் பயிற்றுவிக்கும் மிக நெருங்கிய பிணைப்புள்ள கல்விச் சமூகம் ஆகும். உங்கள் அனைவரையும் அன்பாக வரவேற்பதுடன், உங்களுடன் இணைந்து செயல்படுவதற்கு ஆர்வமாய் உள்ளோம்.

தமிழ்ப்பள்ளியில் பாதுகாப்புக்குத்தான் முன்னுரிமை என்பதை அனைவரும் அறிவீர்கள். பின்வரும் பாதுகாப்புக் குறிப்புகளைக் கவனமாகப் படிக்க வேண்டுகிறோம். உங்களது ஒத்துழைப்புக்கு நன்றி!

1. பள்ளிவளாகத்தில் வண்டி (மகிழுந்து) ஓட்டும்போது கைப்பேசியைப் பயன்படுத்தக்கூடாது.
2. இங்கே பயிலும் மாணவர்கள் நான்கு வயது முதல் பதின்ம வயதினர். எனவே வண்டி ஓட்டும்போது எந்தக் கவனச் சிதறலும் இல்லாமல் கவனமாகவும், மெதுவாகவும் ஓட்ட வேண்டும்.
3. வண்டி நிறுத்தகத்தில் குழந்தைகள் நடமாட வாய்ப்புள்ளதால் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்கவும். சில நிறுத்தும் இடங்கள் கேரி தமிழ்ப் பள்ளி ஆசிரியர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அதேபோல் பல இடங்கள் பெற்றோர்களுக்காகவும் ஒதுக்கப் பட்டுள்ளது. அதனால் பெற்றோர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் மட்டும் தங்களது வண்டியை நிறுத்தவும்.
4. சில நேரங்களில் மிகவும் விரைவாகத் தங்களது குழந்தையைப் பள்ளியில் விட்டுவிட்டோ அல்லது விரைவாக அழைத்துக்கொண்டோ வந்துவிடலாம் என்று எண்ணி வண்டியில் இருந்து இறங்கிச்செல்ல வேண்டாம். நாம் நினைப்பதைவிடக் கூடுதல் நேரமாக வாய்ப்புள்ளது. அதனால் பலர் வரிசையில் காத்திருக்க வேண்டிவரும். வண்டியில் இருந்து இறங்க வேண்டுமென்றாலோ, குழந்தையை இருக்கையில் அமரவைக்க வேண்டுமென்றாலோ, வண்டியை முதலில் நிறுத்தகத்தில் விட வேண்டுகிறோம்.
5. போக்குவரத்தைச் சீர் செய்யும் பெற்றோர் தன்னார்வலர்களுக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டுகிறோம்.

*தொடர்ச்சி பக்கம் 3 இல் .........*

## இதழாசிரியரின் இதயத்திலிருந்து ...

***கலாநிதி. நாகலிங்கம் சிவயோகன்***

எமது தமிழ்ப்பள்ளியின் வளர்ச்சிக்கு செய்தியிதழின் பங்களிப்பு இன்றிய மையாதது ஆகும். கடந்த வருடம் 270 மாணவர்களுடனும் 58 ஆசிரியர்களுடனும் இருந்த தமிழ்ப்பள்ளி இம்முறை 357 மாணவர்களுடனும் 74 ஆசிரியர்களுடனும் இயங்கி வருகிறது. இந்த அபரிதமான வளர்ச்சியை அனைவருக்கும் கொண்டு செல்ல செய்தியிதழ் மிகச் சிறந்த ஊடகமாகச் செயற்படும்.

எமது தமிழ்ப்பள்ளியின் முதலாவது செய்தி யிதழ் சித்திரை 2015 இல் வெளிவந்தது. அதன் பின் தவிர்க்க முடியாத காரணங்களால் அதனை வெளியிட முடியவில்லை. அதனை மீண்டும் புதுப்பொலிவுடன் ஒவ்வொரு தவணை யிலும் வெளிவிடுவதென்று தற்போதைய ஆசிரியர் குழு முடிவு செய்துள்ளது. அதற்கான முயற்சியின் பலனாக தற்போது முதலாவது இதழ் வெளியிடப்படுகிறது. இதனை தொடர்ந்து வெளியிட முயற்சிகள் எடுப்போம். மேலும் இச் செய்தியிதழானது முதல்வர், உதவி அதிபர் மற்றும் வகுப்பு ஆசிரியர்களின் செய்திகளும் உள்ளடக்கப் பட்டுள்ளது.

இதன் மூலம் ஒவ்வொரு வகுப்பிலும் என்ன கற்பிக்கப்படுகிறது என்பதை பெற்றோர்களும் மாணவர்களும் அறியக் கூடியதாக இருக்கும். அடுத்து வரும் இதழ்களில் நாம் ஆசிரியர்களின் சிறு கட்டுரைகள், இலக்கணச் சுருக்கங்கள், பாடசாலை போட்டி முடிவுகள், பயனுள்ள துணுக்குகள் போன்றவற்றையும் இணைக்கவுள்ளோம். அத்துடன் மாணவர்களின் சிறு சிறு ஆக்கங்களையும் எதிர்காலத்தில் இணைக்கவுள்ளோம்.

எனவே ஆசிரியர்களே இம்முறை செய்ததுபோல் அடுத்தமுறையும் தங்கள் ஆதரவை நல்கி இச் செய்தியிதழ் தொடர்ந்து வெளிவர உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம். இச் செய்தியிதழ் தொடர்பான தங்கள் கருத்துக்களையும் எங்களுக்கு அறியத்தரின் அடுத்த இதழை இன்னும் சிறப்பாக வெளியிடுவோம்.

*****

## செய்தியிதழ்க் குழு *2016 -2017*

***முனைவர். காசி அழகானந்தம்***
***திரு. தி. வெ. ராமசுப்ரமணியன்***
***திரு. செல்வன் பச்சமுத்து***
***திருமதி. இரம்யா வரதராஜன்***
***முனைவர். இளங்கோவன் கோபால்***
***திருமதி. சர்மிளா குமார்***
***திருமதி. விஜயலட்சுமி செல்வக்குமார்***
***திரு. அசோக் நாகராஜன்***

*****



***முதல்வரின் மனதிலிருந்து.....*** *தொடர்ச்சி*

***வருகை முதன்மையானது:***

பள்ளியின் சிறந்த வருகைப் பதிவு என்பது பள்ளியின் வெற்றிக்குறியீடு ஆகும். பள்ளிக்கு வராத மாணவர்களால் முறையாகக் கற்பது இயலாது என்பதால் ஒவ்வொரு நாளும் சரியான நேரத்திற்கு வர வேண்டுகிறோம். வகுப்பறைகள் பிற்பகல் 01:30 மணிக்குத் திறக்கப்படும், ஆசிரியர்களும் அதற்குள் வந்துவிடுவர். பள்ளி நாட்களில் பிற்பகல் 01:45 மணிக்குப் பாடங்கள் நடத்தத் தொடங்கப்படும். எங்களது பள்ளி ஆசிரியர்கள் மிகக் கடுமையாக முயன்று ஆயத்தமாவதுடன், மாணவர்களுக்கு பிற்பகல் 01:45 முதல் 03:15 வரை சிறப்பாகவும் கவனமாகவும் பாடமெடுக்கின்றனர். மருத்துவமனைக்குச் செல்லுதல், குடும்ப நெருக்கடிகள் போன்றவற்றைத் தவிர்த்து வேறு எதற்காகவும் குழந்தைகளைப் பள்ளியில் இருந்து முன்னதாக அழைத்துச்செல்ல வேண்டாம். பள்ளியின் ஒவ்வொரு மணித்துளியும் முதன்மையானதே!

***வீட்டில் தமிழில் பேசுவதும், வீட்டுப் பாடங்களை முறையாகச் செய்வதும் முதன்மையானது:***

வீட்டில் தமிழில் மட்டும் பேசுவதன் மூலம், குழந்தைகளுக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகத் தாங்கள் விளங்க முடியும். வீட்டுப்பாடங்களைத் தவறாமல் முறையாகச் செய்யும் மாணவர்கள் பள்ளியிலும் சிறந்து விளங்குகின்றனர். குழந்தைகள் நாள்தோறும் வீட்டுப்பாடம் செய்ய ஊக்குவிப்பதுடன், அதற்கு நீங்கள் உதவியாகவும் இருக்க வேண்டுகிறோம். அவர்கள் புதியதொரு மொழியைக் கற்கின்றனர் என்பதால் தங்களுடைய ஈடுபாடும் பங்களிப்பும் மிகுதியாகத் தேவையென்பதை நினைவில் கொள்ளவும்.

***ஈடுபாட்டைக் காட்டவும்:***

புதிய பள்ளிக் கல்வியாண்டை ஏற்றுக்கொள்வதென்பது, மாணவர்களும் பெற்றோரும் ஈடுபாட்டைக் காட்டுவதும், பங்களிப்பதும் ஆகும். எமது மாணவர்களுக்காக தமிழ் மழை, ஆண்டு மலர், போட்டிகள் ஆகியவை நடத்தப்படும். பள்ளி வகுப்புகள் தொடங்கும்போது ஒழுங்குசெய்தல், பதில் ஆசிரியர்களாக கடமையாற்றுதல், இறுதியில் வகுப்புகளை மீளமைத்தல், போக்குவரத்தைச் சீர் செய்தல், நிகழ்ச்சி ஒழுங்கமைவு ஆகியவற்றில் பெற்றோர்கள் தன்னார்வலர்களாகப் பங்களிக்க வேண்டுகிறோம்.

***பெற்றோர் ஆசிரியர் சந்திப்பு:***

மாணவர்கள், பெற்றோர், ஆசிரியர்கள் ஆகியோர்க்கு நம்பிக்கை ஏற்படுத்துவதிலும், தமிழ் கற்கும் தகுதி வாய்ந்த மாணவர்களை உருவாக்குவதிலும் பெற்றோர் ஆசிரியர் சந்திப்பு மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தும் நடவடிக்கையாகும்.

தங்கள் குழந்தைகளின் ஆசிரியரைச் சந்திக்கவும், அவர்களைப் பள்ளிப் பாடத்தில் மட்டுமல்லாது ஏனைய கலைகளிலும் வெற்றியாளர்களாக உருவாக்கவும் தாங்கள் அளிக்கும் ஒத்துழைப்புக்கும், நேரத்திற்கும் நன்றி தெரிவிக்கிறோம். தங்கள் பிள்ளைகளின் கல்வி நிலைமை, நடவடிக்கைகள் குறித்து அறிய விரும்பினால் எங்களைத் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம். □

*****

## கேரி தமிழ்ப்பள்ளி பற்றி ஒரு சில தகவல்கள்

*முனைவர் தணி குமார் சேரன்*

நமது கேரி தமிழ்ப் பள்ளி பொருளீட்டும் நோக்கமற்ற நிறுவனமாகப் பதிவு செய்யப் பட்டு உள்ளது. அத்துடன், அமெரிக்க அரசின் வருமான வரித்துறை (Internal Revenue Service) - யின் 501 (c) (3) விதியின் கீழ் வரிவிலக்குப் பெற்றுள்ளது. ஆகவே, கேரி தமிழ்ப் பள்ளிக்கு வழங்கும் நன் கொடைகளுக்கு வரிவிலக்கு உண்டு.

நிர்வாகக் குழு உறுப்பினர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவ மாணவிகள், மற்றும் நலம் விரும்புவோர் என அனைவருமே மிக்க ஆர்வத்துடன் தாமாகவே முன்வந்து, தன்னலம் கருதாது பல்வகையான உதவிகளையும் புரிந்து வருவது கேரி தமிழ்ப்பள்ளியின் பெரும்பேறு என்றால் மிகையாகாது. நமது உடன்பிறப்பு அமைப்பு என நாம் கருதும் கேரோலைனா தமிழ்ச் சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ள மிகப் பலர் கேரி தமிழ்ப் பள்ளியில் மிகவும் ஈடுபாட்டுடன் பணியாற்றுவது பெரிதும் பாராட்டுக்கு உரியது. இந்த இரண்டு தமிழ் அமைப்பின் குறிக்கோள்களும் ஒரே தகைமை உடையவை, ஒத்தவை. எனவே, இவ்விரண்டு அமைப்புக்களும் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து சிறந்த முறை யில் செயலாற்ற முடிகின்றது; செயலாற்றி வருகின்றன. இந்த மாண்பு, இவ்விரண்டு அமைப்புக்களுக்கும் சாலவும் நற்பயன் விளைவிக்கின்றது.

ஆசிரியர்களுடனும் பெற்றோர்களுடனும் பள்ளி நிர்வாகம் நடத்தும் கலந்துரை யாடல்களும், ஆசிரியர் - பெற்றோர் கலந்துரையாடல்களும் பள்ளியில் உள்ள குறைகளைக் களைவதற்கும், நல்ல செயற்பாடுகளை இன்னும் மேம்படுத்து வதற்கும் பெரிதும் உதவி புரிகின்றன; பள்ளியை சீரிய முறையில் சிறப்புடன் நடத்துவதற்கு உந்துகோலாக விளங்குகின்றன.

அமெரிக்காவில் நடைபெறும் தமிழ்ப்பள்ளி களிலேயே மிகவும் குறைந்த கட்டணம் பெறும் ஒருசில பள்ளிகளில் நமது கேரி தமிழ்ப் பள்ளியும் ஒன்று என்பது நாம் அனைவரும் பெருமை கொள்வதாகும். □

*****

## மழலை வகுப்பு செய்திகள்

இந்த ஆண்டு தமிழ்ப்பள்ளியில் முதன் முதலாக மழலை வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. மாணவர்கள் மிகவும் ஆர்வமாக பள்ளிக்கு வர ஆரம்பித்தார்கள். மாணவர்களின் ஆர்வத்தை அதிகரிக்கும் வகையில் நாங்கள் விளையாட்டாக சில பாடங்களைக் கற்பித்தோம்.

நாங்கள் முதலில் வணக்கத்தில் ஆரம்பித்து சிறு சிறு குழந்தைப் பாடல்கள், நீதிக் கதைகளைக் கூறினோம். பின்பு அதனை பிள்ளைகள் ஆர்வமாக கவனிக்க கை செய்கையின் மூலம் கற்பித்தோம். உதாரணமாக காக்கா பாடல் சொல்லிக் கொடுக்கும் போது பாடலை மட்டும் பாடாமல் காகத்தின் நிறம், அது எப்படிச் சத்தமிடும் என்பதையும் சத்தமிட்டுக் காண்பித்தோம்.

பேச்சுத்திறனை கொண்டுவர ஆலோவின் நடந்த போது அவர்களுக்கு பிடித்தமான உடை அணிந்து வரச் சொல்லி பின்பு அதைப் பற்றிப் பேசச் சொன்னோம்.

தக்காளி, வெண்டைக்காய் - சிவப்பு மற்றும் பச்சை, என்று உண்மையான காய்கறிகள் கொண்டுவந்து விளையாட்டாக சொல்லிக் கொடுத்தோம்.

ஒருமுறை மாணவி பூவொன்றைக் கொண்டு வந்து அதன் நிறம் என்ன அத்தை என்று கேட்டாள். பின்பு அன்று வகுப்பு முழுவதும் நாங்கள் பூக்களின் நிறம் பற்றி பேசினோம். இவ்வாறாக நாங்கள் குழந்தைகளின் கேள்விகளிற்கு தக்கவாறு வகுப்பை சில நேரங்களில் மாற்றி விடுவோம்.

அவர்களை விழிப்புணர்வுடன் இருக்க தேங்காய் என்றால் உட்கார் தென்னை மரம் என்றால் நில் என்று விளையாட்டின் மூலம் உற்சாகப்படுத்துவோம். குழந்தைகளின் தசை அசைக்கும் திறன்களை வலிமைப்படுத்த சில பயிற்சித் தாள்கள் வீட்டுப்பாடமாக கொடுக்கப்பட்டது.

பண்டிகை காலங்களில் வண்ணம் தீட்டும் படங்களை கொடுத்து பின்பு ஏன் தீபாவளியை கொண்டாடுகிறோம் என்பதைப்பற்றிய கதைகளை கூறினோம். பெற்றோரும் எமக்கு முழு ஒத்துழைப்பைக் கொடுத்தார்கள். □

*****

## *வகுப்பு 1 அ செய்திகள்*

எமது வகுப்பு தமிழ்த்தாய் வாழ்த்துடன் ஆரம்பிக்கும். முதலில் 10 நிமிடங்கள் வரை நாம் மாணவர்களுடன் அளவளாவுவோம். பின்னர் கடந்த வார வீட்டுவேலையை சரி பார்ப்போம். மாணவர்கள் 12 உயிர் எழுத்துக்கள் 1 ஆய்த எழுத்து மற்றும் 18 மெய் எழுத்துக்களை உச்சரிக்கவும் எழுதவும் பழகியதோடு 23 உயிர்மெய் எழுத்துக்களையும் (ட் + அ = ட) 23 தமிழ் சொற்களையும் பழகினார்கள். வாய்மொழிப் பயிற்சியாக மாணவர்கள் 1 முதல் 20 வரை எண்ணவும், 8 குடும்ப உறவுகள், 6 நிறங்கள், 6 மிருகங்கள், 10 பழங்கள், 6 வடிவங்கள் போன்றவற்றையும் கற்றனர். அத்துடன் மாணவர்கள் 4 பாடல்களையும் பாடநூல் புத்தகத்திலிருந்து கற்றனர். □

*****

## *வகுப்பு 1 ஆ செய்திகள்*

1 ஆ வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு இந்த காலாண்டுக்கு பாடநூல் மற்றும் பயிற்சி நூலிருந்து பாடம் ஐந்து வரை கற்பிக்கப்பட்டது. தமிழ் எழுத்துக்களில், "உ" வரிசை வரை உயிர்மெய் எழுத்துக்கள் பயிற்றுவிக்கப்பட்டது. மாணவர்கள் இந்த உயிர்மெய் எழுத்துக்களை நன்றாக அறிதல், உச்சரித்தல் மற்றும் எழுதுதலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. ஒவ் வொரு பாடத்திலும் இந்த எழுத்துகளால் ஆன சொற்களைத் தெளிவாக உச்சரித்தல், மற்றும் அச்சொற்களால் உருவான சிறு சிறு வாக்கியங்களை வாசிப்பதற்கும் மற்றும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கவும் கற்றுக் கொடுக்கப்பட்டது.

பயிற்சி நூல் புத்தகத்தில் வார்த்தைகளை வைத்து கட்டத்தில் சரியாக எழுத்தை நிரப்புதல், சரியான எழுத்தைக் கொண்டு சொற்கள் கண்டுபிடித்தல், மற்றும் மறைத்திருக்கும் எழுத்தை கண்டுபிடித்தல், எழுத்துக்களை கொண்டு சொல் உருவாக்குதல், படத்தை பார்த்து சொற்கள் உருவாக்குதல் போன்று பல வகைகளில் மாணவர்களுக்கு பயிற்றுவித்துள்ளோம்.

இலக்கணத்தில் ஒருமை பன்மை நடத்தியுள்ளோம். மிக எளிமையான முறையில் ஒருமை பன்மை என்றால் என்ன, பாடநூலில் வரும் ஒருமை சொற்களை கொண்டு பன்மை சொற்களை எப்படி எழுதுவது என்பது குறித்து கற்பித்துள்ளோம்.

தமிழில் உரையாடுவது என்பது சில மாணவர்களுக்கு சிரமமாக இருப்பதால், ஒவ்வொரு வகுப்பிலும் குறைந்தபட்சம் பத்து நிமிடங்கள் அவர்கள் அந்த வாரம் நடந்த சில சுவையான நிகழ்வுகளை தமிழில் உரையாட ஊக்கப்படுத்தினோம். மேலும் இக்காலண்டில் இரண்டு திருகுறள்களை பொருள் மற்றும் கதையுடன் விளக்கம் தந்து அறிமுகப்படுத்தியுள்ளோம்.

இவை அனைத்தும் முதலாவது தவணையில் குழந்தைகளுக்கு எளிய முறையில் கதை, பாடல் மற்றும் பல சுவையான முறைகள் கொண்டு எங்கள் 1 ஆ ஆசிரியர்கள் கற்பித்துள்ளனர்.

*****

## *வகுப்பு 2 அ செய்திகள்*

நாம் 2 அ வகுப்பில் தமிழில் பேசுவதற்கு முதன்மையான கவனம் செலுத்துகிறோம். நாங்கள் வகுப்பறையில் மாணவர்களை தமிழில் பேசும்படியும் மற்றும் வீட்டில் எல்லோருடனும் தமிழில் உரையாடும் படியும் பரிந்துரைக்கிறோம். நாங்கள் படங்களை விளக்க மற்றும் கதையொன்றின் வடிவில் அவற்றைக் கேட்டுத் தமிழில் உரையாடல் செய்ய உதவி புரிகிறோம்.

நாங்கள் பல்வேறு இனிமையான தாளத்துக்கு தமிழ்ப் பாடல்களை பயிற்றுவித்து மாணவர்களை தமிழில் பாடத் தூண்டுகிறோம். அவர்கள் தாங்களாகவே கதைகள், படங்கள் மற்றும் அறிக்கைகளை புரிந்து கொண்டு அவர்கள் அவற்றை விளக்க உதவுகிறோம். மற்றும் வினைச்சொல், காலங்கள் இடையிலான வித்தியாசத்தைப் புரிந்து கொள்ள எளிய உரையாடல்கள் மூலம் வினைச்சொல் மற்றும் காலங்களை அறிமுகப் படுத்துகிறோம்.

*****

## *வகுப்பு 2 ஆ செய்திகள்*

வகுப்பு 2 ஆ மாணவர்களுக்கு இந்த முதல் பருவத்தில் அடிப்படை இலக்கணம் பற்றி கற்பித்தோம். எழுத்து இலக்கணம் (குறில், நெடில், வல்லினம், மெல்லினம், இடையினம்) மற்றும் சொல் இலக்கணம் (பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச் சொல், உரிச்சொல்) ஆகிய இரண்டிற்கும் சிறு உதாரணங்கள் கொடுத்து எளிமையான முறையில் கற்பிக்கப்பட்டது.

மேலும், வாரத்தின் நாட்கள், தமிழ் மாதங்கள், நிறங்கள், வடிவங்கள் மற்றும் பழங்கள் பற்றியும் மாணவர்கள் படித்து தெரிந்து கொண்டார்கள். பாடநூலில் உள்ள ஐந்து பாடங்களையும் அதற்கான பயிற்சி நூல் பயிற்சிகளையும் செய்து முடித்தார்கள்.
மாணவர்களுக்கு வாசிக்கும் பழக்கத்தை ஊக்குவிற்கும் விதமாக, சிறு கதை புத்தகங்களை வகுப்பிலும், வீட்டிலும் படிக்க பயிற்சி அளித்தோம். பாட நூலில் உள்ள முதல் நான்கு ஆத்திச்சூடியும் அதன் பொருளும் மாணவர்களுக்கு இலகுவாக

புரியும் விதத்தில் கதைகள் கூறுவதன் மூலம் கற்பிக்கப்பட்டது.

மேலும் மாணவர்களின் தமிழ் ஆர்வத்தை வளர்க்கும் எண்ணத்தில், திருக்குறள் ஒன்றை அதன் பொருளுடன் கற்றுக் கொடுத்தோம். வகுப்பு நேரத்தில் மாணவர்களின் வாசிக்கும் திறன், வினாடி வினா எழுதும் திறன், தமிழில் சரளமாக பேசுகின்ற திறன், புரிந்து கொள்ளுதல் போன்ற பல திறன்களின் அடிப்படையில் அவர்களுக்கு மதிப்பெண்கள் அளிக்கப்படுகிறது.

இதைத் தவிர வாரம் தோறும் வீட்டுப்பாடம் மற்றும் வருகைப் பதிவும் ஆசிரியர்கள் சரி பார்த்து பதிவு செய்கிறார்கள் என்பதையும் தெரிவித்து கொள்கிறோம். □

*****

## *வகுப்பு 3 அ செய்திகள்*

முதலாம் தவணையில் நாம் பாடப் புத்தகத்தில் பக்கம் 30 வரையும் பயிற்சிப் புத்தகத்தில் பக்கம் 31 வரையும், பண்புள்ள குடிமக்கள் நூலில் முதல் 2 பாடங்களும் கற்பித்தோம்.

இவற்றைவிட ஆசிரியர் கையேட்டில் கொடுக்கப்பட்ட விடயங்களான குடும்பம், மகிழ்ச்சியான நேரம், பெற்றோர்கள் கோபப்பட்ட நிகழ்வு, செய்த குறும்புகள், செல்லப்பிராணியின் குறும்புகள், தூங்க முடியாமல் இருந்த நிகழ்வுகள், பிடித்த கதாபாத்திரம், மறக்க முடியாத நிகழ்வு போன்றவற்றையும் கற்பித்தோம்.

மேலும் தன்மை, முன்னிலை, படர்க்கை போன்றவற்றையும் ள, ல, ழ ஒலி வேறுபாட்டையும் கற்பித்தோம். இதற்காக நாம் வெவ்வேறு ள, ல. ழ உள்ள சொற்களைத் தொகுத்து கையேடாக வழங்கியிருந்தோம் அத்துடன் தமிழில் சொற்கள் அமையும் விதம் பற்றியும் கற்பித்து அதற்குரிய கையேடும் தயாரித்து வழங்கியிருந்தோம்.

மேலதிகமாக 5 திருக்குறள்களும் 2 நீதிநூற் பாடல்களும் கற்பித்தோம். இம்முறை திருக்குறள்களுக்கு பொருத்தமான கதையொன்றைச் சொல்லி மாணவர்கள் அதனை வகுப்பில் உள்வாங்கி வீட்டில் திரும்பவும் எழுதும் பயிற்சியைக் கொடுத்தோம். அது மிகவும் பலனைக் கொடுத்தது. □

*****

## *வகுப்பு 3 ஆ செய்திகள்*

3 ஆ வகுப்பில் மாணவர்கள் தமிழை எல்லா பரிமாணங்களிலும் கற்கிறார்கள். தமிழில் சரளமாக வாசித்தலும் நன்கு வாசிப்பதை புரிந்து கேள்விகளுக்கு பதில் சொல்வதும் அவசியமாக்கப்பட்டுள்ளது.

அதேபோல், பண்டிகைகள் பற்றி கட்டுரை மற்றும் சுவரோட்டி வரையைச் செய்து அவர்களின் எழுத்துத் தமிழ் சாணை ஏற்றப்படுகிறது. வகுப்பிலும் வீட்டிலும் தமிழில் பேச ஊக்குவித்து அவர்களின் தமிழ் உரையாடல் திறன் மேம்பட செய்கிறோம். இவை மட்டுமன்றி சொல்வளம், இலக்கணம், இலக்கியம் மற்றும் கலாசாரத்ததையும் மாணவர்கள் கற்றுக்கொண்டு பிறமொழி களோடு பேதப்படுத்தி பார்க்கும் திறனையும் வளர்க்க

எங்கள் ஆசிரியர்கள் ஆற்றும் தன்னலமற்ற பணி அளவிடற்கரியவாம்.

இவை மட்டுமன்றி போட்டிகள் மற்றும் தமிழ் மழை போன்ற மேடை நிகழ்ச்சிகளின் மூலம் நம் மாணவர்களின் ஏனைய திறமைகளையும் அவர்களுக்கு அடையாளம் காட்டி அவர்களுக்கிருக்கும் தயக்கங்களை போக்கவும் வாய்ப்புகளை அமைத்து கொடுத்து ஆசிரியர்கள் நாங்களும் உதவுகிறோம். 

*****

## *வகுப்பு 4 அ செய்திகள்*

முதலாம் தவணையில் 4 அ வகுப்பு மாணவர்கள் இலக்கணத்தில் சொல் இலக்கணம், எழுத்து இலக்கணம், பால், இடம், காலம், தினண ஆகியவற்றை மீளாய்வு செய்தனர். தமிழ் பாட நூல், பயிற்சி நூல், பண்புள்ள குடிமக்கள் நூல் ஆகியவற்றில் உள்ள பாடங்களை படித்து அவற்றைத் தமிழில் சுருக்கி கூறவும் கற்பிக்கப்பட்டது.

தொடர் வாக்கியம் எழுதுவதிலும், வாக்கியங்களை விவரித்து எழுதுவதிலும், சரியான இடைச் சொற்கள் சேர்த்து எழுதுவதிலும் நன்கு தேர்ச்சி யடைந்துள்ளனர். தமிழ்நாட்டை பற்றி ஆய்வு செய்து கட்டுரை எழுதத் தொடங்கியுள்ளனர். அத்துடன் மாணவர்கள் வகுப்பில் பல நல்ல விடயங்களைப் பற்றி ஆரோக்கியமான விவாதத்தில் ஈடுபட்டும் வருகின்றனர். 

*****

## *வகுப்பு 4 ஆ செய்திகள்*

எமது வகுப்பில் பாடநூல் பாடங்கள், இலக்கணம், இலக்கியம் முறையாக கற்பிக்கப்படுகிறது. வகுப்பின் முடிவில் மாணவர்கள் சரளமாக எழுத, படிக்க, பேசத் தெரிய வேண்டும் என்பதே எமது நோக்கம்.

ஒவ்வொரு பாடத்திலுமுள்ள அனைத்து சொற்களையும் தொகுத்து சொல் வங்கியாக மாணவர்களுக்கு வழங்கப் படுகிறது. ஒவ்வொரு பாடம் மற்றும் பாடத்திட்டத்திலுள்ள இலக்கணம் பயிற்று விக்கப்பட்டு பயிற்சிகள் அளிக்கப்படுகிறது.

இலக்கிய வகையில் கொன்றை வேந்தன் மற்றும் பழமொழிகள் இரண்டும் பயிற்று விக்கப்பட்டது. அத்துடன் பல்வேறு வகையான கதைகள், கட்டுரைகள் மற்றும் கடிதங்கள் எழுதும் முறைகளும் சொல்லிக் கொடுக்கப்பட்டது. மேலும் வாரம் ஒரு திருக்குறள் வீதம் சில திருக்குறள்களும் கற்றனர். பண்புள்ள குடிமக்கள் நூலின் மூலம் வாழ்வியல் முறைகளை அறிவுறுத்துகிறோம்.

மாணவர்கள் ஒளிவு மறைவில்லாமல் மனதில் தோன்றும் கருத்துக்களை தமிழில் பரிமாறவும், கேள்விகள் கேட்கவும் ஊக்குவிக்கப்படுகிறது. இது எமது கலை, கலாசாரம் மற்றும் பண்பாட்டு முறைகளை அறியுவும் உதவுகிறது. இது மாணவர்களில் ஆர்வத்தைத் தூண்டி தமிழ்ப் பயணத்தை தொடர வழிவகுக்கிறது. 

*****

## *வகுப்பு 5 அ செய்திகள்*

முதல் வகுப்பில், அடிப்படை தமிழ் இலக்கணம் பற்றிய மாணவர்களின் நினைவாற்றல் புதுப்பிக்கப்பட்டது. பாடப் பகுதியில் பாரம்பரிய விளையாட்டுக் களையும் நவீன விளையாட்டுகளையும் ஒப்பிட்டுப் பேசினோம். "ஆடுபுலி ஆட்டம்" என்னும் விளையாட்டைப் பற்றிய தகவல்களைக் கேட்டு மாணவர்கள் கேள்விகளுக்கு விடையளித்தார்கள்.

விடுகதைப் பாடலைப் பாடி விடைகளைக் கண்டு பிடித்தார்கள். "பறக்கும் சட்டை" என்னும் பாடத்தை பொருத்தமான தொனியுடனும் சரியான உச்சரிப்புடனும் வாசித்தார்கள். அறிவியல் புனைகதை அரும்பொருளகம் பற்றியும், விண்வெளி பற்றிய தமிழ் சொற்களையும் அறிந்து கொண்டார்கள்.

இலக்கணப் பகுதியில், "இலிருந்து" "இடமிருந்து" என்ற வேற்றுமை உருபுகள், நிறுத்தற் குறிகளான வியப்புக்குறி, கேள்விக்குறி, புள்ளி, அரைப்புள்ளி, காற்புள்ளி ஆகியற்றை வாக்கியங்களில் பயன்படுத்தும் பயிற்சிகளைச் செய்தார்கள்.

முதல் பருவத்திற்குரிய திருக்குறள் மற்றும் பழமொழிகளையும், அதன் பொருளையும் தெளிவாகச் சொல்லக் கற்றுக் கொண்டார்கள்.

இரு பொருள் உடைய சொற்களை, இரு பொருளும் விளங்கும் வகையில் வாக்கியத்தில் எழுதக் கற்றுக் கொண்டார்கள். விளக்கப்படக் கருத்து அறிதலில், விளம்பரத்தைப் படித்துப் புரிந்து கொண்டு கேள்விகளுக்குச் சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதினார்கள். ஒவ்வொரு வகுப்பிலும் சொல் வங்கியில் தேர்வு நடத்தப்பட்டது. 

*****

## *வகுப்பு 5 ஆ செய்திகள்*

5 ஆ வகுப்பு மாணவர்களின் சொல் வளத்தைப் பெருக்கி அதன்மூலம் அவர்கள் சொந்தமாக வாக்கியம் அமைக்கவும், பத்தியைப் படித்து கேள்விகளுக்கு பதில் எழுதவும், கட்டுரை எழுதவும், பழகுகிறார்கள்.

தமிழில் முழு வாக்கியம் அமைக்க இன்றியமையாத இலக்கணம் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்றால் என்ன? அவற்றின் பயன்பாட்டை அறிந்து வாக்கியங்களை அமைக்கிறார்கள். ஆகிய, முதலிய, சில, சிலர், பல, பலர் பயன்படுத்துதலும், -“லகர, ளகர, ழகர, ரகர, றகர, நகர, னகர, ணகர” ஒலி வேறுப்பாட்டுச் சொற்களைப் பழகுவதாலும், பிரித்து எழுதுதல், சேர்த்து எழுதுதல் மூலமாகவும் பிழையின்றி வாசிக்க முடிகிறது.

திருக்குறள், பழமொழி, ஆத்திச்சூடி, பாரதியார் பாடல்கள், மற்றும் சில செய்யுள்களின் மூலம் அவர்களுக்கு இலக்கியத்தில் ஈடுபாடு ஏற்படுகிறது. பாடங்கள் மூலமாகவும், கதைகள் வாயிலாகவும், ‘பண்புள்ள குடிமக்கள்’ புத்தகம் மூலமும், நட்பு, நாட்டுப்பற்று, தேசிய சேவை, நல்லிணக்கம் தமிழர்களின் விழாக்கள், பண்பாடு, ஆகியவற்றைப் பற்றி கலந்துரையாடுகிறார்கள்.

*****

## *வகுப்பு 6 அ செய்திகள்*

வகுப்பு 6 அ வில் முதலாம் பருவத்தில் வாழ்க்கையின் இலட்சியங்களின் முக்கியத் துவத்தை விளக்கும் பாடநூல் தொகுதி 1 இல் பாடங்கள் 1, 2 உம் சமூக மன்றங்களின் அமைப்பை விளக்கும் தொகுதி 2 இல் பாடங்கள் 3, 4 உம் கற்பிக்கப்பட்டன.

பயிற்சி நூலிலும் தொகுதிகள் 1, 2 ஆகியவற்றிற்கான பயிற்சிகள் செய்து முடிக்கப்பட்டது. இதனைவிட இலக்கணத்தில் வேற்றுமை உருபுகள் மற்றும் வாக்கியங்களை இணைப்பதில் பயிற்சி அளிக்கப் பட்டது. பாடநூலில் இருந்து 3 பழமொழிகளும் அத்துடன் இரண்டு திருக்குறள்களும் கற்பிக்கப்பட்டன. மேலும் பாடக் கருப்பொருள் சார்ந்த சில தலைப்புகளில் கட்டுரை எழுதவும் பயிற்சியளிக்கப்பட்டது.

*****

## *வகுப்பு 6 ஆ செய்திகள்*

தவிர்க்க முடியாத காரணத்தால் வகுப்பு 6 ஆ செய்திகள் இம் மலரில் இடம் பெறவில்லை.

*****

**தமிழ்த்தாய் வாழ்த்து**

நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து
செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

மனோன்மணீயம் பெ. சுந்தரம் பிள்ளை

~~~★~~★~~★~~~

**தமிழ்மொழி கற்க மாணவர்களுக்கு உபயோகமான சில இணையத்தளங்கள்**

www.tamilvu.org

http://www.southasia.sas.upenn.edu/tamil

www.noolagam.com

www.tamilacademy.com

http://useful.tamilpriyan.com/learn-tamil.html

http://www.quora.com/What-are-the-most-effective-ways-to-learn-Tamil-at-home

http://dictionary.tamilcube.com

~~~★~~★~~★~~~

# கேரி தமிழ்ப்பள்ளி

**வடகேரொலைனா, அமெரிக்கா**

https://www.carytamilschool.org

© Cary Tamil School, 2016 -2017

~~~★~~★~~★~~~
~~~